ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்
BAR ASSOCIATION OF SRI LANKA

26 நவம்பர் 2021

தமிழ் மொழிபெயர்ப்பு

**பொலிஸ் தடுப்பு காவலில் இருந்த நபர் கொல்லப்படுதல்**

25 நவம்பர் 2021 அன்று இரவு, சட்டத்தரணி திரு. சஞ்சய ஆரியதாச அவர்கள் இலங்கை சட்டத்தரணிகள் சங்க (இ.ச.ச) தலைவர் அவர்களை தொடர்பு கொண்டு களுத்துறை பிராந்திய குற்றவிசாரணை பிரிவின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்ட தனது கட்சிக்காரரான டிங்கரிங் லசந்த எனப்படும் எச்.எல். லசந்த என்பவரை தடுப்புக் காவலில் இருக்கும் பொழுதே ஆயுதங்களை அடையாளங்காட்ட அழைத்துச்செல்லும் வழியில் சுட்டுக்கொல்லும் திட்டம் ஒன்றினை பொலிசார் கொண்டிருப்பது குறித்த தகவல்கள் தனக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக அறிவித்தார்.

அதன்பின்னர் உடனடியாக இசசதின் தலைவர் பொலிஸ்மா அதிபரிற்கு மின்னஞ்சல் வாயிலாகவும் குறுந்தகவல் வாயிலாகவும் இவ்விடயம் குறித்து அறிவித்தார். அத்துடன் அவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகள் மற்றும் புலன்விசாரணைகளிற்கு பொறுப்பான ஆணையாளரிற்கும் அப்பிரிவின் பணிப்பாளரிற்கும் இது குறித்து அறிவித்தார். மேலதிகமாக, இ.ச.சதின் தலைவர் மனிதாபிமான முகவரக கூட்டமைப்பின் தலைவராக விளங்கும் வட மாகாண ஆளுநர் திரு. ஜீவன் தியாகராஜா அவர்களிற்கும் அறிவித்தார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் திரு. தியாகராஜா ஆகியோர் அதிகாரிகளை தொடர்பு கொண்டதாகவும் இம்முறைப்பாடு குறித்து அறிவித்ததாகவும் சந்தேக நபரது பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் முகமாக அவர்களை தலையிடுமாறு வேண்டிக்கொண்டதாகவும் உறுதிப்படுத்தினர்.

எவ்வாறாயினும் இன்று காலை (26 நவம்பர்) அக்குறித்த சந்தேக நபர் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களை மீட்க அழைத்துச்செல்லப்படும் வழியில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக ஊடகங்கள் அறிக்கை வெளியிட்டுள்ளன.

மீண்டும் ஒருமுறை இலங்கை சட்டத்திற்கு புறம்பான கொலை அடையாளங்களைக் கொண்ட ஒரு சம்பவத்தில் இலங்கை போலீஸ் ஈடுபட்டுள்ளது இக்கொலையானது நாட்டின் மனித உரிமைகள் நிலைமை மோசமடைந்து வருவதன் விளைவாக நாட்டிற்கும் அதன் பொருளாதாரத்திற்கும் விளைவுகள் ஏற்படும் அச்சுறுத்தல்கள் இருக்கும் வேளையில் இடம்பெற்றுள்ளது.

இ.ச.ச மாத்திரமின்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் நிறைவேற்றுத் துறையின் சிரேஷ்ட நபர் என பலரும் இப்பாதக செயலை தடுக்க பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்ட பொழுதும் இவை யாவற்றையும் புறக்கணித்து இக்கொலையானது இடம்பெற்றுள்ளது. அரசின் பாதுகாப்பில் இருக்கும் பொழுது சந்தேக நபர்களது உரிமைகளை பாதுகாப்பது குறித்த இந்நாட்டின் உச்ச நீதிமன்றங்கள் முன்னதாக வழங்கிய தீர்ப்புக்களை கருத்திற்கொள்ளாது இருப்பதனை பொலிசானது தொடர்கின்றது.

இ.ச.சமானது இதற்கு முன்னைய சம்பவங்களும் கூட முறையாக விசாரிக்கப்படவில்லை என்பதையும் குற்றவாளிகளை தண்டனைக்குட்படுத்த சட்டத்தின் முன்னர் கொண்டுவருவதற்கு அதிகாரிகளினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் குறித்துள்ளது. இத்தகைய



| President | Deputy President | Secretary | Treasurer | Assistant Secretary |
|---|---|---|---|---|
| Saliya Pieris PC | Anura Meddegoda PC | Rajeev Amarasuriya | Rajindh Perera | Pasindu Silva |

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk

நடவடிக்கைகள் நீதியின் நிர்வாகத்தின் மீது ஒட்டுமொத்தமாக கேள்விகளை எழுப்புகிறது என்பதுடன் அதன் வினைத்திறன் மீதான பொதுமக்களது நம்பிக்கை இழப்பிலும் தாக்கம் செலுத்துகிறது.

இக்கொலைக்கான பொறுப்புடைமையானது அக்கொலையை புரிந்தவரை மாத்திரமின்றி அதனை செய்யுமாறு உத்தரவிட்டவர்கள் மற்றும் சந்தேக நபரது பாதுகாப்பினை உறுதிப்படுத்த தவறியோர் என அனைவரையும் சார வேண்டும். பொலிஸ் பாதுகாப்பில் இருந்த நபரை பாதுகாக்க தான் தவறியமைக்கான விளக்கத்தை வழங்குமாறு இ.ச.சமானது பொலிஸ்மா அதிபரை கேட்டுக்கொள்கின்றது.

இவ்விடயம் குறித்து இ.ச.சமானது மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் தனது கண்காணிப்பையும் தொடரும் என்பதுடன் பொதுமக்களிற்கும் அது குறித்து அறிவிக்கும்.

தங்கள் உண்மையுள்ள,

கையொப்பம் இடப்பட்டுள்ளது

**ரஜீவ் அமரசூரிய,**
**செயலாளர்,**
**இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்**



President Saliya Pieris PC | Deputy President Anura Meddegoda PC | Secretary Rajeev Amarasuriya | Treasurer Rajindh Perera | Assistant Secretary Pasindu Silva

No. 153, Mihindu Mawatha, Colombo 12, Sri Lanka.
Telephone : +94 11 2447134, +94 11 2331697, Fax : +94 11 2448090 E-mail: basl.lawnet@gmail.com Web: www.basl.lk